தாய்மொழி - தமிழ்

# மொழியும் பிள்ளையின் அபிவிருத்தியும்




1211102

ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| எழுத்தாளர் | : எம். எஸ். அலெக்சாந்தர் |
| பாடப் பதிப்பாசிரியர்கள்: | வீ. சுப்பிரமணியம் (முல்லைமணி)<br>க. சொக்கலிங்கம் (சொக்கன்)<br>கே. நடேசன்<br>எஸ். சோதிப் பெருமாள்<br>முருகு இரத்தினம் |
| தளக் கோலம் | : ஏ. சிவராஜா<br>வை. ஏ. டி. நிமல் சந்திரசிறி |
| மேற்பார்வை | : ஆர். பி. ஏ. ஜயசேகர<br>கே. ஏ. பியதிஸ்ஸ |
| பணிப்பு | : கலாநிதி எஸ். டி. எல். அமரகுணசேகர |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 15018.
S.tala

# மொழியும் பிள்ளையின் அபிவிருத்தியும்

தொலைக் கல்வித் துறை
தேசியக் கல்வி நிறுவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆசிரியர் கல்வி ஆரம்ப பாடநெறி | 12 |
| தாய்மொழி | 1211 |
| மொழியும் பிள்ளை அபிவிருத்தியும் | 121102 |

உள்ளடக்கம்

பக்கம்

0.0 அறிமுகம் ........ 01

1.0 குறிக்கோள்கள் ........ 01

பகுதி I

2.0 மொழி அபிவிருத்திக்கு இடைத்தாக்கம் செய்யும் காரணிகள் ........ 04

2.1 உடற்காரணிகள் ........ 07

பகுதி II

3.0 உளக்காரணிகள் ........ 10

3.1 மன எழுச்சிக்கான காரணிகள் ........ 11

பகுதி III

4.0 சுற்றுடற்காரணிகள் ........ 12

4.1 குடும்பம் ........ 12

4.2 சமவயதுக் குழுக்கள் ........ 13

4.3 பாடசாலை ........ 14

பகுதி IV

5.0 தொடர்புறுத்தும் ஊடகம் ........ 16

5.1 சமயச் செயல்கள் ........ 16

5.2 வேறு காரணிகள் ........ 16

6.0 பொழிப்பு ........

7.0 பிற் சோதனை ........ 17

8.0 ஒப்படை ........ 19

9.0 விடைகள் ........ 19

10.0 உசாத்துணை நூல்கள் ........ 20

© 1991 கல்வி அமைச்சு

வெளியீடு 1.2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 0.0 அறிமுகம்

பிள்ளையின் வளர்ச்சிபற்றி ஆசிரியர்கள் அறிய வேண்டியது அவர்தம் தொழிலுக்கு மிகமிக அவசியமான தொன்றாகும்.

குழந்தையின் உடல், உளம், மனவெழுச்சி முதலியன பிறப்பிலிருந்து சில வருடங்களிலேயே துரித வளர்ச்சியடைவதை அவதானிக்கலாம்.

உங்களின் கற்பித்தல் தொடர்பான இந்த மொடியூலின் **(Module)** வாயிலாகப் பிள்ளையின் உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி, மனஎழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி ஆகியவற்றை நீங்கள் நன்கு அறிந்து கொள்ளலாம். பிள்ளையின் அபிவிருத்திக்கு உதவும் காரணிகளுள் முதன்மையானது மொழியேயாகும்.

கருத்து விளங்கும் பருவத்திலிருந்து பிள்ளையானது பலவிதமாக மொழியைக் கையாளும் திறனைப்பெறும் வரை பிள்ளையால் ஏற்படுத்தப்படும் மொழி அபிவிருத்திச் செயல்கள் அதன் விருத்திக்கு மிக உதவியாய் உள்ளன.

இந்த மொடியூலை நீங்கள் கற்பதனால் பிள்ளையின் பூரண அபிவிருத்திக்கு உதவுவதும் மொழி அபிவிருத்தி அடையும் விதத்தைத் தெளிவாக நீங்கள் அறிய உதவுவதும் பயன்கள் ஆகும். மொழி அபிவிருத்தியின் போது பிள்ளைகளின் உடல்உள மனஎழுச்சி விருத்திகளை வளர்ப்பதற்கு ஏற்ற வழி வகைகளை இங்கு அவதானிப்போம்.

இந்தக் காரணிகளின் செல்வாக்கினை மனத்திலே கொண்டு பிள்ளையின் அபிவிருத்திக்கு உதவும் விதத்தில் மொழிச் செயற்பாடுகளை நீங்கள் ஒழுங்குபடுத்துவதும் செயற்படுத்துவதும் அமையும்.

# 1.0 குறிக்கோள்கள்

இந்த மொடியூலைக் ( **Modules** ) கற்பதனால் நீங்கள் பின்வரும் குறிக்கோள்களை அடைவீர்களென எதிர்பார்க்கின்றோம்.

- பிள்ளையினுடைய வளர்ச்சிக்கும் மொழிக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு.
- பிள்ளையின் அபிவிருத்திக்கு மொழி மிக முதன்மையான காரணியாகும்.
- மொழி வளர்ச்சிக்கான செயற்பாடுகளை ஏற்படுத்தும் போது சுயகாரணிகளும் சுற்றுடற் காரணிகளும் உண்டு என்பதைக் கவனத்திற் கொண்டு அவற்றிற்கேற்பச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் திறனைப் பெறல்.
- நடைமுறையிலுள்ள நீண்டகாலப் பிரயோகத்தின் முக்கியத்துவத்தை உணர்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் மொழி வளர்ச்சிக்கான காரணிகளையும் அவை பற்றிய விபரங்களையும் அறிய இந்தப்பகுதியை வாசிக்குக.

**பகுதி I**

## 2.0 மொழி அபிவிருத்திக்கு இடைத்தாக்கம் ஏற்படுத்தும் காரணிகள்

பிள்ளையின் உடல், உள, மனஎழுச்சி, சமூக அபிவிருத்திகளுடன் அவனுடைய மொழியும் வளர்ச்சி அடையும். பிள்ளையின் வயது அதிகரிக்கும் போது அவனுடைய உறுப்புக்களும் வளர்சியடையும். குழந்தைப் பருவத்தில் உடல் உறுப்புக்களால் செய்யக்கூடிய செயல்கள் மிகக் குறைவே. ஓர் உதாரணத்தை நோக்குவோம். குழந்தையின் காது பூரணமான உறுப்பாக அமைந்திருந்தாலும் ஆரம்பத்தில் தாயின் வாயிலிருந்து உண்டாகும் ஒலிகள் போன்ற சில ஒலிகளை மாத்திரமே அதனால் இனங்காண முடியும். காலப்போக்கில் சூழலிலிருந்து கேட்கும் பல ஒலிகள் காதில் விழுவதால், அவ் ஒலிகளைப் பிரித்தறிந்து இனங்காண முடியும். கருத்துள்ள ஒரு சொல்லை விளங்கிக் கொள்ளும் வகையில் இந்தச் செயற்பாடு படிப்படியாக நடைபெறும். ஓசைகளை உச்சரிக்கும் உறுப்புக்களின் வளர்ச்சி படிமுறையாக ஏற்படுவதாகும்.

ஆரம்பத்தில் குழந்தையிடமிருந்து வெளியாவது கருத்தற்ற ஒலிகள் மாத்திரமே அதனுடைய வளர்ச்சியுடன் மொழியும் வளர்கிறது. ஆ.................................ஓ..................................பா..................... ஊ..... ...........................போன்ற தனிப்பட்ட ஒலிகளை ஆரம்பத்தில் வெளிப்படுத்தும் குழந்தை காலப் போக்கில் பல கூட்டு ஒலிகளை இணைத்து அவற்றால் அமையும் சொற்களை உச்சரிக்கும் திறனைப் பெற்றுக்கொள்ளும். பின்பு சொற்களை இணைத்துக் கருத்துள்ள சொற்களைக் கூறக் கூடியதாகப் பழகும்.


கண், கை போன்ற அவயவங்களின் வளர்ச்சியும் இதே முறையிலே படிப்படியாக நடைபெறும். இந்த அவயவங்களின் வளர்ச்சி பிள்ளையின் மொழி வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும். மொழி வளர்ச்சிக்கு பிள்ளையின் உடலுறுப்புக்களின் வளர்ச்சி மாத்திரம் போதியதன்று. படிப்படியாக உள, மன எழுச்சி அபிவிருத்தியும் தேவைப்படும். பிள்ளையின் வளர்ச்சியில் ஆரம்பத்திலிருந்து சுய காரணிகளும், சுற்றுடற் காரணிகளும் முக்கிய இடத்தை வகிக்கும். இவற்றிற்கிணங்க மொழி அபிவிருத்தியில் தாக்கங்களை கொடுக்கும் காரணிகள் சுய காரணிகள், சுற்றுடற்காரணிகள் என்று இருவகைப்படும்.

**சுய காரணிகள் :**

உடல் சம்பந்தமானவை
உளம் சம்பந்தமானவை
மன எழுச்சி சம்பந்தமானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றுடற் காரணிகள் :

குடும்பம்
சமவயதுக் குழுக்கள்
பாடசாலை
தொடர்புறுத்தும் ஊடகங்கள்
சமயம்சார் செயல்கள்
வேறு காரணிகள்

மேற் குறித்தவற்றைக் கீழே தரப்படும் குறிப்பிலிருந்து மேலும் தெளிவாக்கிக் கொள்க.

## செயற்பாடு 1

பிள்ளையின் வளர்ச்சியுடன் மொழித்திறன்களின் வளர்ச்சியும் உண்டாகின்றது என்பதை இச் செயற்பாட்டினூல் அறிந்து கொள்ளலாம்.
ஆலோசனைகள்:

கீழ்க்காணும் இலக்கம் ஒன்றின் மாதிரிக்கமைய ஐந்து அட்டவணைகளை தயாரித்துக் கொள்க. 1 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரையும் ஐவைந்து பிள்ளைகளாக நீங்கள் விரும்பியவாறு தெரிவு செய்து அவர்களுடைய பெயர்களை அட்டவணைகளில் வகுப்பு வாரியாக எழுதுக.

ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் நீங்கள் தெரிவு செய்த பிள்ளைகளை அவ்வவ் வகுப்பிற்கேற்பத் தனித்தனியாகத் தெரிந்து அட்டவணையில் உள்ள சொற்களின் சாதாரண கருத்தை குறித்த பிள்ளை அறிந்தாரா? இல்லையா ? என்பதைக் கண்டறிந்து கருத்தை அறிந்திருந்தால் — சரி எனவும் அறியாவிட்டால் — பிழை எனவும் பொருத்தமானதை அடைப்புக்குள் குறிக்க.

நிரல்கள் ஐந்தையும் பூரணப்படுத்திய பின்பு அதைத் தொடர்ந்து இலக்கம் 02 அட்டவணையைப் பூர்த்தி செய்க.

வகுப்பு:

அட்டவணை 1

| சொல் | 1 வது | 2வது | 3வது | 4வது | 5வது | சரிகளின் தொகை |
|---|---|---|---|---|---|---|
| மணிக்கூடு | | | | | | |
| தீவு | | | | | | |
| வாசிக்கிறான் | | | | | | |
| ஆடுகிறான் | | | | | | |
| தலை | | | | | | |
| வடிக்கிறாள் | | | | | | |
| வயல் | | | | | | |
| தைக்கிறாள் | | | | | | |
| ஆசிரியர் | | | | | | |
| ஓடுகிறான் | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

| சொல் | 1ஆம் வகுப்பில் சரியானவைகளின் தொகை | 2ஆம் வகுப்பில் சரியானவைகளின் தொகை | 3ஆம் வகுப்பில் சரியானவைகளின் தொகை | 4ஆம் வகுப்பில் சரியானவைகளின் தொகை | 5ஆம் வகுப்பில் சரியானவைகளின் தொகை | சரிகளின் தொகை |
|---|---|---|---|---|---|---|
| மணிக்கூடு | | | | | | |
| தீவு | | | | | | |
| வாசிக்கிறான் | | | | | | |
| ஆடுகிறான் | | | | | | |
| தலை | | | | | | |
| வடிக்கிறாள் | | | | | | |
| வயல் | | | | | | |
| தைக்கிறாள் | | | | | | |
| ஆசிரியர் | | | | | | |
| ஓடுகிறான் | | | | | | |

இந்த அட்டவணைத் தரவுகளின் உதவியைக் கொண்டு கீழ்க்காணும் கேள்விகளை அவதானிக்குக.

- அட்டவணையின் விடைகளுக்கிணங்க ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகளின் சொல்லறிவு சமமா? சமமற்றதா ?

- அந்த சமமான அல்லது சமமற்ற தன்மைக்கு என்ன காரணம் என நீங்கள் கருதுகிறீர்கள் ?

- வகுப்பிலிருந்து வகுப்பேற்றம் பெறும்போது பிள்ளை அறிந்த சொற்களில் வளர்ச்சி காணப்படுகின்றதா?

- ஏதாவதொரு வளர்ச்சி ஏற்பட்டிருந்தால் அதற்கான காரணம் யாது ?

- பிள்ளைகளின் மொழி வளர்ச்சியின் காரணிகளாக நீங்கள் கருதுவது என்ன ? நீங்கள் கருதிய முறை எவ்வளவு சரியென்பதை இந்த மொடியூலை படித்த பின்பு உங்களால் அறிந்து கொள்ள முடியும்.

மொழி வளர்ச்சியில் தாக்கங்களைக் கொடுக்கும் சுய காரணி என்ன நிலையில் வரும், அவற்றிற்கான உடற்காரணிகள் யாவை என்பதைக் கீழ் வரும் பகுதியை வாசித்தறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. 1 உடற்காரணிகள்




மொழியின் திறன்கள் நான்கு வகைப்படும்.


அவை கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பனவையாகும்.

அத்திறன்களைப்பெற முதன்மையானவை கண், காது, வாய் முதலிய அவயவங்களாகும்.

கீழ்காணும் குறிப்பு மூலம் அதைத் தெளிவாக்கிக் கொள்வோம்.

உரிய அவயவங்களின் (உறுப்புக்கள்) உரிய வளர்ச்சி இல்லாவிட்டால் மொழி வளர்ச்சியிலும் குறைபாடுகள் உண்டாகலாம். காதில் குறை பாடுகள் இருந்தால் கேட்கும் திறன் குறைந்து விடும். அதனால் பேச்சிலும் குறைபாடுகள் ஏற்படலாம். ஊமை என்ற நிலை கூட உண்டாகலாம். பலவிதமான ஓசைகள் வாயுமண்டலத்தில் கலந்து ஒலி அலைகளாக காதென்னும் உறுப்பினூடாகச் சென்று செவிப் பறையில் படுவதினால் அதனோடு சம்பந்தப்பட்ட உணர்வு நரம்புகளால் மூளைக்குச் செய்திகள் அனுப்பப்படுகின்றன. முன்னைய அனுபவங் களின் பேருக மூளையில் ஒப்பிடப்பட்டு கருத்துத் தெளிவுறுத்தப் படுகின்றது. இது உடனுக்குடன் நடைபெறும் செயற்பாடாகும்.

ஒலிகளைக் கேட்கும் போது காது உறுப்புக்கள் செயற்படும் முறையை கீழ்க்காணும் படத்தின் மூலம் அறிந்து கொள்வோம்.





ஓசைகள் உச்சரிக்கும்போது அவை சம்பந்தப்பட்ட உறுப்புக்களின் சிறந்த செயற்பாடு தேவைப்படும். நுரையீரலிலிருந்து ஆரம்பிக்கும் காற்று சுவாசக்குழாயூடாக வந்து குரற்பெட்டியில் மோதும் போது அசைவு உண்டாகிறது. அந்த அசைவு நாக்கு, மேல் அண்ணம், கீழ் அண்ணம், மத்திய அண்ணம் போன்ற ஏதாவது ஒரு இடத் தைத் தொடுவதனால் பல்வேறு ஒலிகளை ஒலிக்க முடியும்.

உதாரணம்: க................, ச ஜ ப ம ர ஆகிய ஒலிகளை நாக்கு வெவ்வேறு இடங்களைத்தொடுவதனாலும் தொடாமலும் ஒலிக்கலாம்.

அரிச்சுவடி (எழுத்துக்களின் தொகுப்பு) பற்றிய மொழிநூலில் எழுத்துக்களின் உற்பத்தி இடங்களைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வோம்.

ஒலி உறுப்புக்களின் மாதிரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. அதை அவதானிப்பதால் எழுத்துக்களின் உச்சரிப்பு இடங்களை அறிந்து கொள்ள முடியும்.




1. உதடுகள்
2. பற்கள்
3. முரசு
4. மேல் அண்ணம்
5. கீழ் அண்ணம்
6. தாடை (கடையண்ணம்)
7. நாத்தட்டு
8. நடுநாக்கு
9. பின்நாக்கு
10. பிரிவளி
11. உண்ணாக்கு
12. குரற்பெட்டி
13. நுனிநாக்கு

பகுதி: A மூக்கொலிக் குழாய்
பகுதி: B வாயொலிக் குழாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணால் காணும் வடிவங்களின் செய்திகளை மூளைக்குக் கொண்டு போவதும் விளங்கிக் கொள்வதும் கண்பார்வைக்குச் சம்பந்தப்பட்டதும் நரம்புத்தொகுதிகளூடாக மூளையால் நடைபெறும். வாசிப்பதற்கு கண்ணின் சிறந்த செயற்பாடு மிக அவசியமானதாகும். பார்வைக் குறைவு வாசிக்கும், எழுதும் இடர்களையும் எண்ணக்கருக்களை ஏற்படுவதிலும் பின்னடைவையும் உண்டாக்கும்.

எழுதும் செயலில் கையின் தசை நார்களினதும் நரம்புத் தொகுதியினதும் மூளையினதும் செயற்பாடு தேவைப்படும். இந்த உறுப்புக்களின் சிறந்த செயற்பாட்டுக்கு ஏதாவது ஒரு தடை உண்டாகிவிட்டால் எழுதும் செயலுக்கும் தடையுண்டாகும்.

இப்படி உறுப்புக்களின் செயற்பாட்டினை வேறு வேறாகக் காட்டியது தெளிவு படுத்தும் பொருட்டேயாம். ஆயினும் மொழிச் செயற்பாடுகளில் இவை ஒன்றிணைந்து செயற்படும் என்பதை கவனத்திற் கொள்க. எழுதும் போது கைத்தசை நார்கள், நரம்புகள், கண், காது, மூளை ஆகிய சகல உறுப்புக்களும் ஒன்றிணைந்தே செயற்படும். இங்கே ஏதாவதொரு உறுப்புக் குறையுண்டேல் மொழிச் செயற்பாடுகளை திறம்பட நிறைவேற்றுவதிலே தடையேற்படும்.

## செயற்பாடு II

மொழிச் செயற்பாடுகளை விருத்தி செய்வதில் உறுப்புக்களின் சிறந்த செயற்பாடு முக்கிய இடத்தை வகிப்பதால், அவைகளின் வளர்ச்சிக்கு ஏற்ப தாய்மொழிப் பாடங்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதை இந்தச் செயற்பாட்டின் மூலம் அறிந்து கொள்வோம். கீழ்க்காணும் பாடல்கள் இரண்டினூடாக ஆலோசிக்கப்பட்ட செயற்பாடுகளை ஒழுங்கு செய்க.




பாடல் :

(அ) சிறகை வானில் அடிக்காது
சிறப்பாய் எங்கும் பறக்கிறேன்
எண்ணில் மண்ணில் இறங்கிறேன்
இதமாய் ஓடி நிற்கிறேன்.
(எண்ணில் - எண்ணாமல்)

(ஆ) தென்னை மட்டைமாட்டுக்கு
தேங்காய்ச் சிரட்டைக் கொம்பிரண்டு
பூட்டுதல் மிகக்கொடுமையே
தென்னந்தும்புக் கயிற்றினால்
தென்னைமரத்திலே கட்டி தென்னை ஈக்கினால் அடித்ததுமே
எனக் கேற்பட்ட கவலையால் தேங்காய் பிண்ணாக்கை
தெள்ளிய நீரில் கரைத்துக் கொடுத்தேன்
தென்னை மட்டைமாடு தெற்குத்திசை பார்த்தே
தென்னமரந்தினடியிலே கிடந்ததே

படி 1 ஆலோசனை

- மேற் கூறிய இரு பாடல்களில் 3 ஆம் அல்லது 2 ஆம் அல்லது 5 ஆம் வகுப்புக்குப் பொருத்தமான பாடல் ஒன்றைத் தெரிவு செய்க. அதனைப் பல அட்டைகளில் தெளிவாய் எழுதுக. மூவருக்கொரு அட்டையாவது கொடுக்க வேண்டும்.

- தெரிவு செய்த பாடலுக்குத் தொடர்பான நிகழ்வுகளைக் காட்டக் கூடிய படம் வரைக.

- தேவையான சங்கீதக் கருவியொன்றைப் பெறுக. இல்லாதவிடத்து இரண்டு சிரட்டைகளாவது பயன்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 11 :

பாடலைப் பிள்ளைகளின் முன்னால் பல தடவைகள் பாடுக. தேவை யெனின் வேறொருவரையாவது பாடுவதற்குப் பயன் படுத்துக.

★ பாடலை எழுதிய அட்டைகளைப் பிள்ளைகளுக்கு வழங்குக.

★ பிள்ளைகளுடன் சேர்ந்து பாடுக.

★ பிள்ளைகளை மாத்திரம் பாடச் செய்க.

★ பாடலைப் பற்றிப் பிள்ளைகளோடு கலந்துரையாடுக.

★ பொருத்தமான இடங்களிலே படங்களைக் காட்டுக.

★ படங்களைக் காட்டிப்பிள்ளைகள் பேசுவ தற்கு வழிகாட்டுக.

★ மீண்டும் பிள்ளைகளோடு பாடுக.

★ குழுக்களாகப் பிரித்துக் கீழ்க்காணும் செயற்பாடுகளை உரிய முறை யிற் செய்ய வழிகாட்டுக.

★ பாடலை எழுதல் - பாடலின் கருத்துக் கேற்பப் பல வாக்கியங்கள் எழுதுக.

★ ஆகாயவிமானத்தை அல்லது தேர் சம்பந்தமாக ஏற்படும் சத்தங் களைப் பிள்ளைகள் ஒலிப்புதற்கு வழிகாட்டுக.

★ ஆகாய விமானத்தின் செயற்பாடுகள், அல்லது தேரின் செயற் பாடுகள் போல் பிள்ளைகள் பாவனை செய்யத் தூண்டுக.

★ ஆகாயவிமானம் அல்லது தேர் பற்றிப் பிள்ளை பெற்ற அநுப வங்களை எழுத விடுக.

★ படம் ஒன்றைக் கீற விடுதல் / மாதிரியுருவம் செய்ய விடுதல் இச்செயற்பாடுகளை மூன்று வாரங்கள் வரை செய்வதற்கு வசதி யளிக்குக.

**செவ்வைபார்த்தல் 1**

இலக்கம் 02 இல் அமைந்த செயற்பாடு எந்தளவு வெற்றி அளித் தது, என்பதனை இந்தச் செவ்வைப்பார்த்தலைப் பூர்த்தி செய்வ தன் மூலம் தீர்மானியுங்கள். பொருத்தமான அடைப்பினுள் ஆம் அல்லது இல்லை என்பதனை இடுக.

| | | |
|---|---|---|
| 1. ஆசிரியர் பாடும்போது பிள்ளைகள் நன்கு கேட்டார்களா ? | ( ) | ( ) |
| 2. ஆசிரியருடன் சேர்ந்து பாட எல்லாப் பிள் ளைகளும் விரும்பினார்களா? | ( ) | ( ) |
| 3. பாடும்பொழுது பிள்ளைகளிடம் சுய செயற் பாடுகள் வெளிப்பட்டனவா? | ( ) | ( ) |
| 4. ஆசிரியரின் உதவியில்லாமலே பிள்ளை களால் பாட முடிந்ததா? | ( ) | ( ) |
| 5. சுய விருப்பத்துடன் மீண்டும் பாட முன்வந்தார்களா? | ( ) | ( ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. படங்களைக் காட்டியபோது பிள்ளைகளுள் விசேட ஆர்வம் ஏற்பட்டதா ? ( ) ( )

7. படங்களைச் சமர்ப்பித்தபோது பிள்ளைகள் அங்களுக்குள் கலந்துரையாடலுக்கு ஊக்குவிக்கப் பட்டார்களா? ( ) ( )

8. இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளாத பிள்ளைகளும் இருந்தார்களா ? ( ) ( )

9. பாடலை எழுதுவதை அல்லது வசனம் எழுதுவதை விடப் படம் வரைவதில் கூட ஆர்வம் இருந்ததா ? ( ) ( )

10. இச் செயற பாட்டின் போது பிள்ளைகளின் கண், காது ஆகிய உறுப்புகள் ஒன்றிணைந்து செயற்படும் விதத்தை உம்மால் அவதானிக்க முடிந்ததா ? ( ) ( )

பகுதி II

## 3.0 உளக் காரணிகள்

மொழி வளர்ச்சியில் தாக்கங்கள் உண்டாக்கக் கூடிய காரணிகளை முதற் பகுதியில் அறிந்தோம். இப்பொழுது உளக் காரணிகளையும் விரிவாக நோக்குவோம்.

எங்களது உறுப்புக்களுக்கு உரிய செயல்களை நன்முக நிறைவேற்ற மனித மூளையின் செயற்பாடு சரியாக அமைதல் வேண்டும். உறுப்புக்களால் பெற்றுக்கொள்ளும் உணர்வலைகளை மூளைக்குக் கொண்டு வருவது உணர்ச்சி நரம்புகளாகும். மூளையில் அதற்குரிய பகுதியில் நடைபெறும் இரசாயன செயற்பாட்டின் பெறுபேருக உறுப்புக்களைச் செயற் படுத்துவதற்குத் தேவையான கட்டளைகளை அவ்வவ்வுறுப்புக்களைக் கொண்டு செயற்படுத்துவது இயக்க நரம்பாகும். மேற் கூறிய, இரு நரம்புகளும் மூளையை மையமாகக்கொண்டே சிறப்புறச் செயற்பட முடியும். மொழி வளர்ச்சியின் போது உடலின் செயல் அடிப்படையை விபரிக்கும் இடத்தில் மூளை மிக முக்கியமானது என்பது இங்கு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

எண்ணக்கருக்கள் எப்படி உண்டாகின்றன; என்பதன் ஆரம்ப விபரமொன்று மொடியூல் இல. 121103 இல் காட்டப்பட்டுள்ளது. எண்ணக்கருக்கள் ஏற்படுவதில் காட்டப்பட்ட சகல செயற்பாடுகளும் எண்ணக்கருக்களை ஆக்க அவை கருத்துப்பெறச் செய்ய வழிவகுப்பது மூளையேயாகும்.

சிந்தனை, செயல்களுக்காக, எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்படும். கற்கும் சகல செயல்களும் சிந்தனை யாற்றலில் தங்கியுள்ளன. சிந்தனை இயல்பும் அதற்காகப் பயன்படும் எண்ணக்கருக் காரணியும் அந்தந்த மனிதனின் நுண்மதியின் அளவில் தங்கியுள்ளது என்பது "உளவியலாளரின்" கருதுகோளாகும். நுண்மதி என்பது என்ன் என்பதில் பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டிருந்தாலும், மொழியாற்றல் விருத்தியாகும் பகுதியும் நுண்மதியில் இருக்கிறது என்பது "தேஸ்ரன்" என்னும் அமெரிக்க உளவியலாளர் கூறும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தாகும். அவர்காட்டும் நுண்மதிக்காரணிகளில் (Verbal Competency) சொல்லுத்திறன், சொற்களைச் சரளமாய்ப் பேசுந்திறன் ( Fluency ) முக்கியமாக மொழித்திறன்களில் இணைந்துள்ளன,. நினைப்பாற்றல் ( Memory ) நியாயிக்கும் திறன் ( Reasoning ) என்பன மொழியில் தங்கியுள்ளன.

நுண்ணறிவில் மனிதர் வித்தியாசப்படுவர். நுண்ணறிவு கூடுதலடையும் மரபுக் காரணிகளிலும், மற்றைய காரணிகளிலும் தங்கியுள்ளன. பிறப்பினால் தீர்மானிக்கப்படும் நுண்ணறிவின் மொழி வளர்ச்சியினால் கூடுதலடையும். நுண்மதிவளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் விடயமாகும்

## 3.1 மன எழுச்சிக்கான காரணிகள்



மனிதர்கள் தமது நுண்மதி, மனவெழுச்சி ஆகியவற்றின் வளர்ச்சியில் வெவ்வேறு நிலையில் காணப்படுவர். மனிதரைப் பொறுத்தளவில் பிறப்பிலிருந்து தாய்ப்பாசம் போன்ற நடத்தைப் பாங்குகள் காணப்படுகின்றன. இவை போன்றவை பிறப்பிலிருந்து அவதானிக்கப்படுவனவாகும். தாயைக் காணும் குழந்தை தாயிடம் தாவிச் சென்று இருக்க விரும்பும். அதே போன்றசந்தர்ப்பத்தில், பிள்ளையிடம் ஏற்படும் இயற்கை அவா, மனவெழுச்சி நிலைக்கு உதாரணமாகும். மனவெழுச்சி தோன்றுவதற்கு சுற்றுடலில் காணப்படும் ஊக்கிகளே காரணமாகும். மனவெழுச்சியின் காரணத்தாலேயே மனிதர் முகத்திலே துக்கம், கோபம், மகிழ்ச்சி என்னும் வெளிப்பாடுகள் தோன்றுகின்றன. இப்படிப்பட்ட முகபாவங்கள் தோன்றுவதற்குக் குருதியிலுள்ள ஓமோன்களின் இரசாயன மாற்றமே காரணமெனக் கூறப்படுகிறது. அதனாலேயே முகக்குறிகள், வெளிப்பாடுகள் மனவெழுச்சியைக் காட்டுபவைகளாயமைகின்றன.

மனவெழுச்சிகளை வெளியிடுவதில் மொழி மிகச் சிறந்த ஊடகமாகும். விருப்பு, வெறுப்பு ஆகிய மனவெழுச்சிகளை வெளியிடுவதற்கும் மொழியென்னும் ஊடகம் பயன்படுகிறது. விரும்பத்தக்க மனவெழுச்சிகளை மேலும் திறம்பட வெளியிடுவதற்கு மொழியின் செயற்பாடு திறம்பட உதவ வேண்டும்.

மனவெழுச்சிகளை அழகுற உணர்த்தி சமநிலைப்படுத்தி வெளியிடுவதன் பேறாகவே அழகியற் கலைகளான இலக்கியம், சங்கீதம், ஓவியம், சிற்பம் முதலியன ஏற்பட்டன என்று கருதலாம்.

### செவ்வைபார்த்தல் 2

இம்மொழியூறின பினனே தரப்பட்ட சரியான விடைகளோடு உமது விடைகளை ஒப்பிடுக. விடைகள் பிழைத்தால், மீண்டும் இப் பகுதியை வாசித்துத் திருத்துக.

கீழ்க்காணும் கூற்றுக்கள் சரியெனின் சரி ( ✓ ) எனவும், பிழையெனில் பிழை ( ✗ ) எனவும் அடைப்புக்குள் இடுக. இதன் மூலம் நீங்கள் கற்றவைகளை சுயமதிப்பீடு செய்து கொள்க.

1. மொழி அபிவிருத்தியில் தாக்கத்தைக் கொடுக்கும் காரணிகள் சுயகாரணிகள், சுற்றுடற்காரணிகள் என இருவகைப்படும். ( )

2. மொழி அபிவிருத்தியில் கணிக்கப்படும் சுயகாரணிகள் உடல் தொடர்பானவை, உளம் தொடர்பானவை மனவெழுச்சி தொடர்பானவையென மூன்று வகைப்படும். ( )

3. பிள்ளையின் மொழி அபிவிருத்தியில் பாடசாலை சுற்றுடற் காரணிகளில் அடங்கும். ( )

2. மொழியின் நான்குவித செயற்பாடுகளில் கேட்டலில் குறைபாடு காணப்படுவது செவிக்குறைபாடாலாகும் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எழுதும் செயலின்போது கையின் தசை நார்கள், நரம்புத் தொகுதிகள், கண், காது, மூளை என்னும் ஒவ்வொரு உறுப்புக்களும் வேறு வேறுகச் செயற் படும். ( )

6. உணர்வியக்க நரம்புகள் ஒழுங்காகச் செயற்படும் மையம் மூளையாகும். ( )

7. எண்ணக்கருக்கள் முதன்மையாகப் பயன்படுவது சிந்தனைச் செயல்களுக்காகும். ( )

8. 'தேஸ்ரன்' காட்டும் நுண்மதிக் காரணிகளில் சொற் களைக் கையாளும் திறன் சரளமாகப் பேசுந்திறன் ஆகியவை முக்கியமாக மொழியுடன் சம்பந்தப்பட் டவை ஆகும். ( )

9. மனிதர் ஒவ்வொருவரினதும் நுண்மதி சமமானது. ( )

10. சில செயல்களுக்குப் பரம்பரை விருப்பு பிறப்பிலேயே அமையும் எனக் கூறப்படுகிறது. ( )

11. கை தட்டுவதாலும் பேசுவதாலும் வெளியிடப்படுவது ஒருவரின் மனவெழுச்சி நிலையேயாகும். ( )

12. மனவெழுச்சியின் வெளியீடுகளை நெறிப்படுத்தி வெளி விடுவதின் பெறுபேறுகளாகக் அழகியற் கலைகள் ஏற்பட்டன. ( )

பகுதி III

## 4.0 சுற்றுடற் காரணிகள்

மொழி வளர்ச்சியில் மனிதன் சம்பந்தப்பட்ட மூன்று காரணிகளை முன்னர் பார்த்தோம். அடுத்ததாக மொழி அபிவிருத்தியில் தாக் கங்களை ஏற்படுத்தும் சுற்றுடற் காரணிகளைக் கவனத்திற் கொள் வோம்.

குழந்தைப் பருவத்திலிருந்து சுற்றுடல் மூலம் பெற்ற அநுபவங்க ளால் பிள்ளையின் செவிப்புலனும் பேச்சுத் திறன்களும் வளர்கின்றன. சுற்றுடலில் பிள்ளையின் மொழிவளர்ச்சிக்குத் தேவையான சுயகாரணி கள் பூரணமடைந்திருந்தாலும் அதன் வளர்ச்சி, மொழி வளர்ச்சிக்கு


போதியதாக இல்லாத சுற்றுடலில் அமைந்திருந்தால் மொழி வளர்ச்சி நன்கு செயற்படுமென்று நினைப்பது கடினமாகும். இத னல் பிள்ளையின் மொழி அபிவிருத்திக்கு உதவக்கூடிய சுற்றுடற் காரணிகளை வேறுபடுத்தி இனங்காணுவது பயனுள்ளதாக அமையும்.

### 4.1 குடும்பம்

பிள்ளையின் முதலாவதும், நெருங்கியதுமான சுற்றுடல் குடும்பமாகும். ஆரம்பத்திலேயே குழந்தையில் தாக்கம் உண்டாக்குபவர்கள் தாய் தந்தையராவர். படிமுறையில் மொழியின் கருத்தை விளங்கும் பருவத்தை அடையும் போது சகோதர, சகோதரிகள் உட்படக் குடும் பத்தின் ஏனைய அங்கத்தவரின் உறவு பிள்ளைக்குக் கிடைக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த உறவாலே குடும்பத்தின் சில மொழி உபயோகத்தின் நடைமுறைகளை குழந்தை பழக்கிக் கொள்கிறது. பிள்ளை, சொல்வளம் உச்சரிக்கும் திறன்கள் ஆகியவற்றை வீட்டிலுள்ள சுற்றுடலின் தன்மைக்கேற்ப ஊகித்து அறிந்து கொள்கிறது. முதல் ஐந்து வருடங்களில் குழந்தையின் சொல்லறிவின் வளர்ச்சி பற்றிய பரிசோதனை நடத்திய மடோனாஸ்மித் இவ்வாறு கூறுகிறார்.

| | | | | |
|---|---|---|---|---|
| வயது | 1 | வருடம் | 03 | சொற்கள் |
| வயது | 1½ | வருடம் | 22 | ,, |
| வயது | 2 | வருடம் | 278 | ,, |
| வயது | 2½ | வருடம் | 446 | ,, |
| வயது | 3 | வருடம் | 896 | ,, |
| வயது | 3½ | வருடம் | 1222 | ,, |
| வயது | 4 | வருடம் | 1540 | ,, |
| வயது | 4½ | வருடம் | 1870 | ,, |
| வயது | 5 | வருடம் | 2072 | ,, |




பாடசாலைக்குப் பிள்ளை வருவதற்கு முன்பே குடும்பச் சுற்றுடலிலிருந்து பிள்ளை கல்வி கற்கிறது. பெற்றோரிடமிருந்தும், வயதில் முதியவர்களிடமிருந்தும், சகோதர சகோதரிகளிடமிருந்தும் மொழிப்பயிற்சியைப் பெறும் குழந்தை ஐந்து வயதானவுடன் தனது விருப்புவெறுப்புக்களையும் மனக்கருத்துக்களையும் வெளியிடக் கூடிய இயல்புகளைப் பெறும். மொழி ஒன்றினைப் பேசுவதற்கு மனிதனுள் உள்ள மொழி இயல்பைச் சிறு வயதிருந்து ஒருவன் தனது வீட்டிலே வளர்த்துக் கொள்கிறான்.

மொழியொன்றினைக் கற்பதைப் போன்று கூட்டுச் செயல்களை வாழ்க்கையின் முதல் ஐந்து வருடத்தினுள் செய்யமுடிவது மனிதனில் காணப்படும் புதுமையான நிகழ்வும் ஆகும்: என அல்பிரட் வைட்ஹெட் என்னும் பிரித்தானிய கல்வியியலாளர் கூறுகிறார். பிள்ளையின் மொழிவளர்ச்சியில் குடும்பக் காரணிகளில் உள்ள முக்கியத்துவம் இதனால் வெளியாகின்றது.

## 4.2 சமவயதுக் குழுக்கள்



பிள்ளை மூன்று வயதிலிருந்து சமூக சூழலோடு ஈடுபாடு கொள்ளத் தொடங்கும். இதன் பயனாக அது தனது வயதுக்குச் சமமானவர்களுடன் உறவாடத் தொடங்குகிறது. கேட்டல், பேசுதல் ஆகிய முக்கிய மொழித்திறன்களின் துரித வளர்ச்சி உண்டாவது சமவயதுக் குழந்தைகள் ஒன்று சேர்வதில் மொழி அபிவிருத்திக்குரிய அநேகமான செயற்பாடுகள் வளர்ச்சியடைகின்றன. குழந்தையைத் தாலாட்டுதல், வைத்தியர், சாரதி அல்லது ஆசிரியை போன்ற பாவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் முதலிய தளங்களை அமைத்தல் மூலமாக அவர்கள் மொழிச் செயற்பாடுகளை வளர்த்துக் கொள்வர். மண்சோறு சமைத்தல், விளையாட்டுக்கடைகளை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் சம வயதினுள்ள சிறுவரிடையே காணப்படும். இவை மொழி வளர்ச்சிக்கான விளையாட்டுச் செயல்களாகும். உகந்த சமவயதுக் குழுக்கள் இணைவது சிறந்த மொழிவளர்ச்சிக்குக் காரணமாக இருக்கும் என்பது இதனால் தெளிவாகிறது..

## 4.3 பாடசாலை

குடும்பம் சமவயதுக் குழுக்கள் போன்ற காரணிகளைக் கொண்டு ஓரளவு வளர்ச்சியடைந்த மொழியியல்புகளைக் கொண்ட பிள்ளைகள் ஐந்து வயது நிறையும் போது பாடசாலைக்குச் செல்கிறார்கள். இப்படிச் செல்லும் பிள்ளைகளிலுள்ள மொழி இயல்புகள் பலவிதமானவை.

பிள்ளைகளில் இதுபோன்ற வேறுபட்டதன்மை உண்டாக்கக் காரணம் அவர்களுடைய மொழி அபிவிருத்தியில் தாக்கங்களை ஏற்படுத்திய சுயகாரணிகளும் சூழற் காரணிகளும் வெவ்வேறாக அமைந்தமையேயாகும். மொழிவளர்ச்சிக்கு நல்லதொரு சூழலை உருவாக்கிப் பிள்ளைகளின் தனிப்பட்ட திறன்களை வளரச் செய்வது பாடசாலையின் முக்கிய செயலாக வேண்டும். சுற்றாடல் தொடர்பால் வளர்த்துக் கொண்ட கேட்டல், பேசுதல் போன்ற மொழித்திறன்களை மேலும் வளரச்செய்வதற்கான செயற்பாட்டொழுங்குகளைப் பாடசாலையே செய்தல் வேண்டும். எழுதுதலையும் வாசித்தலையும் சிறந்த முறையில் ஒழுங்கு செய்து செயற்படுத்துவதும் மொழி அபிவிருத்தியில் பாடசாலைக்குரிய முக்கிய கடமையாகும். பாடசாலையில் பல்விதமான செயற்பாட்டினை ஒழுங்கு செய்வது மிக அவசியம். இவை போன்ற செயற்பாடுகளை ஒழுங்கு செய்யத் தேவைப்படும் அறிவினைப் பெறுவதற்குப் பாலர் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள மொழி தமிழ் பாடத்திட்டங்களையும், கைந்நூல்களையும் வாசியுங்கள்.

பாடசாலையின் வேறு செயற்பாடுகளும் மொழி வளர்ச்சிக்கு உதவியளிக்கும். வேறுபாடங்களைக் கற்றல், விளையாட்டுகள், கூட்டங்கள், சங்கங்கள், பாடசாலை விழாக்கள், சுற்றுலாக்கள், நாடகங்கள், பாடசாலைசங்கங்கள், பாடசாலை விழாக்கள் சுற்றுலாக்கள், போட்டிகள், குழந்தைகளுக்கான சஞ்சிகைகள், பத்திரிகைகள், வகுப்புச் செய்தித்தாள்கள் ஆகியவை இவர்களுக்காகக் காட்டக்கூடிய உதாரணங்களில் சிலவாகும்.

**செயற்பாடு 3**

3, 4, 5, வகுப்புகளில் ஒன்றை எடுத்துத் தாய்மொழி தவணைப் பரீட்சைப் புள்ளி விபரப்பட்டியலுக்கிணங்க ஆகக் கூடிய புள்ளியைப் பெற்ற பிள்ளையையும் நடுத்தரப் புள்ளி பெற்ற பிள்ளையையும், ஆகக் குறைந்த புள்ளியை எடுத்த பிள்ளையையும் தேர்ந்தெடுத்து அம்மூவரைக்கொண்டு சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடை தருக. உரிய கூட்டில் சரியாயின் (✓) சரி எனவும், பிழையாயின் (✗) பிழை எனவும் அடையாளம் இடுக. இச்செயற்பாட்டினால் மொழி வளர்ச்சியில் சுற்றுடற் காரணிகளின் தாக்கங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

சுற்றுடற் காரணிகளோடு தொடர்புறுத்தும் சாதனம் சமயஞ்சார் செயல்களும் வேறு காரணிகளும் ஆகும். இந்தப்பகுதியை வாசித்து அவற்றை அவதானிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தெரிவு செய்த வகுப்பு:

| இல. | அதிக புள்ளி எடுத்த பிள்ளையின் பெயர் | நடுத்தரப் புள்ளி எடுத்த பிள்ளையின் பெயர் | ஆகக் குறைந் புள்ளி எடுத்த பிள்ளையின் பெயர் |
|---|---|---|---|
| 01. பிள்ளை வகுப்புக்குரிய வயதில் உள்ளதா ? | | | |
| 02. ஒரே வகுப்பில் மீண்டும் படித்திருக்கிறாரா ? | | | |
| 03. சென்ற 3 மாதங்கள் வராத நாட்கள் 15க்கு அதிகமானதா? | | | |
| 04. வகுப்புத் தலைவர் போன்ற ஏதாவது பதவி வகிக்கிறாரா ? | | | |
| 05. குழு முயற்சிகளில் ஈடுபாடுண்டா? | | | |
| 06. அப்பியாசப் புத்தகங்களையும் மற்றும் உபகரணங்களையும் குறைவின்றிக் கொண்டு வருகின்றாரா ? | | | |
| 07. சுத்தம் பற்றி கவனம் செலுத்துகின்றாரா ? | | | |
| 08. வகுப்பு மாணவர்களுடன் சச்சரவு படுகிறாரா ? | | | |
| 09. பிள்ளையினுடைய குடும்பத்தில் சகோதர சகோதரிகளின் தொகை ஐந்துக்கும் அதிகமா ? | | | |
| 10. தாய் உயிருடன் இருக்கிறாரா ? | | | |
| 11. தந்தை உயிருடன் இருக்கிறாரா ? | | | |
| 12, தனது வீட்டிலிருந்தா பாடசாலைக்கு வருகிறார் ? | | | |
| 13. பிள்ளை பார்வை, கேட்டல் குறைபாடுடையவரா ? | | | |
| 14. பாடசாலை நேரத்தின் பின் வேறு வகுப்புகளுக்குச் செல்பவரா | | | |
| 15. சம வயதுப் பிள்ளைகளுடன் உறவு கொள்ள அதிக விருப்பம் காட்டுகிறதா ? | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.0 தொடர்புறுத்தும் ஊடகம்




பிள்ளையின் மொழி வளர்ச்சிக்கு உதவும் சுற்றுடற் காரணிகளுள் தொடர்புச் சாதனங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. சமூகத்துக்குச் செய்திகளையும் அறிவையும் பெற்றுக் கொடுக்கும் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள் ஆகியவை தொடர்புச் சாதனங்களாகக் கருதப்படுகின்றன. இன்று இவை சக்திவாய்ந்த கல்வி உபகரணங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. வானொலி எமது நாட்டில் அதிகம் பயன்படும் சாதனமாகும். வானொலி நிகழ்ச்சிகள் பிள்ளையின் மொழி வளர்ச்சிக்குத் தூண்டு கோலாக அமைகின்றன.

தொலைக்காட்சி மூலம் கல்வி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தின, வார செய்தித்தாள்களை விட வேறு பல செய்திகளைத் தாங்கிவரும் வெளியீடுகளும் எமது நாட்டில் உண்டு. இத்தகைய வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் பிள்ளைகளின் மொழி அபிவிருத்தியில் முக்கிய சேவையினை ஆற்றுகின்றன. இவைகளை உரிய முறையில் பயன்படுத்தினால் பிள்ளைகளின் மொழித் திறன்கள் மேலும் அபிவிருத்தியடையும்.

## 5.1 சமயச் செயல்கள்

பௌத்த தேவாலயம், கோயில், பள்ளிவாசல் ஆகிய புனித தலங்களிலே நடைபெறும் சமயச் செயல்களில் கலந்து கொள்வதால் பிள்ளையின் மொழி அபிவிருத்தி அடைகிறது. அந்தந்தச் சமயத்தலங்களில் உபயோகிக்கும் சொற்களைக் கற்பதனாலும் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் இடம்பெறும் இசைப் பாடல்களைக் கேட்பதனாலும் பிள்ளையினுடைய மொழி அபிவிருத்தி அடைகிறது.

## 5.2 வேறு காரணிகள்

மொழி அபிவிருத்தியில் தாக்கங்களை ஏற்படுத்தும் வேறு காரணிகளாகச் சமூக இயக்கங்கள், சங்கங்கள், கூட்டங்கள், சந்தைகள் பாடசாலைச் செயலகம், அரசாங்க, தனியார் நிலையங்கள் ஆகியனவும் உதவுகின்றன.

# 6.0 பொழிப்பு

இந்த மொடியூலில் நாங்கள் கற்ற விடயங்களின் சாராம்சம்:-

பிள்ளையின் அபிவிருத்தியில் மொழி முக்கிய காரணியாகும். அது பிள்ளையின் முழு ஆளுமையிலும் பிரதிபலிக்கிறது. பிள்ளையின் தனித் திறன்களை வளர்க்க மொழி உதவுகிறது. மொழி அபிவிருத்திக்கு முக்கியமானவை சுய காரணிகளும் சூழற் காரணிகளும் ஆகும். ஆசிரியர் அந்தக் காரணிகளை இனங்கண்டு பிள்ளையின் மொழி வளர்ச்சிக்குப் பொருத்தமான செயற்பாடுகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.0 பிற்சோதனை

கீழ்க்காணும் சதுரங்களில் பொருத்தமான எழுத்துக்களை இட்டு நிரப்புக.

இடமிருந்து வலம்.

1. கருத்துக்களை வெளிப்படுத்தும் முக்கிய ஊடகம்.
2. மொழித்திறன்கள் நாலு என் பது.............................ஆகும்.
4. எண்ணக்கரு ஆக்கத்திற்கு அவசியமானது.
6. கூரிய நுண்மதிக்கு இதுவும் அவசியமென உளவியலாளர் கூறுவர்
7. இது சிந்தனையைத் தூண்டும்

மேலிருந்து கீழ்

2. உணர்ச்சி மொழி (இலக்கியம்) வெளிப் படுத்தும் மெய்ப்பாடுகளில் ஒன்று.
3. மொழி விருத்திக்கான காரணிகள் இரண்டிலே இது ஒன்றாகும்.
4. அழகியற் கலைகளில் ஒன்று.
5. எழுத்துப் பொருள் தரும்போது இது ஆகும்.
6. பல பொருள் தரும் ஒரு சொல்

இம்மொடியூலின் பின்னே தரப்பட்ட சரியான விடைகளோடு உமது விடைகளை ஒப்பிட்டறிக. விடைகள் பிழைத்தால், மீண்டும் இப்பகுதியை வாசித்துத் திருத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | ▨ | 2 ச | | ▨ |
| ▨ | 3 சு | 4 சி | | | லை |
| 5 சொ | | த் | | ▨ | ▨ |
| | | | ஷ | ▨ | ▨ |
| ▨ | 6 ப | | | ப | |
| ▨ | | | 7 கே | | வி |

கீழ்க்காணும் 1 - 17 வரையும் உள்ள சொற்பட்டியலில் பொருத்த மான சொற்களை எடுத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.

1. மொழி வளர்ச்சியில் பிள்ளைக்கு உதவியளிக்கும் ஆரம்ப, நெருங் கிய சுற்றாடல்............................................ ஆகும்.
2. அமெரிக்க உளவியலாளரான.............................. என்பவரின் கருத்துப்படி சொற்களைக் கையாளுந்திறன் நுண்மதியின் ஓர் கூறாகும்.
3. மொழித்திறன்களில் ஒன்றான ........................................ மூலமும் எண்ணக்கருக்கள் வளரும்.
4. சகல மொழிச் செயற்பாடுகளுக்கும்........................................ ................................................................ .. முக்கியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒவ்வொரு பிள்ளையினுடைய நுண்மதி கூடியும் குறைந்தும் இருப்பதற்கு வேறு காரணங்களைப் போல்.................................................................உதவியாய் இருக்கும்.

6. இயன்றளவு அளவு புதிய.................................................. பெற்றுக் கொடுப்பது பிள்ளையின மொழிவளர்ச்சிக்கு து..... யாகும.

7. ......................................................... பிள்ளையின் மொழி இயல்புகளைப் பண்படுத்தும் நிலையமாகும்.

8. பிள்ளையின் பூரண......................................... அபிவிருத்தி அடையச் செய்வதில் உதவி செய்யும் காரணிகளில் மொழியும் ஒன்றுகும்.

9. பேசுவதற்காக உச்சரிக்கும்.................................................. நன்ருக அமைந்திருக்க வேண்டும்.

10. ஓர் ஓசை எங்களுக்குக் கேட்பதற்கு முன்பு சுற்றுடலில் உள்ள பலவிதமான ஓசைகள் வளி மண்டலத்துடன் இணைந்து ..........................................................ஆக காதின் துவாரங் களின் ஊடாகச் சென்று செவிப்பறையிற்படுவதாலேயாகும்.

11. மொழி அபிவிருத்தியில் சுய காரணிகளைப் போலவே ..........................................காரணிகளும் மிக முக்கியம் என் பதனை அறிவோம்.

12. கண்களின் சிறந்த செயற்பாடு.................................................. மிக முக்கியமானது.

13. சமவயதுக் குழுக்களாகப் பிள்ளைகளினுல் செய்யப்படும் .........................................................அவர்களின் மொழி வளர்ச்சிக்குக் காரணமாகும்.

14. வானெலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் ஆகிய ..........................................................பிள்ளைகளின் மொழி வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

15. பிள்ளைகளினுடைய மொழியறிவு வளர்வதற்கு ஆசிரியர் சிறந்த ..................................................ஏற்படுத்த வேண்டும்.

சொற்பட்டியல்

1. வகுப்பறைச் சூழலை
2. தேஸ்ரன்
3. ஆளுமை
4. மொழி அபிவிருத்திக்கு
5. சிந்தனையும
6. வாசித்தல்
7. ஓசையலைகள்
8. மனவெழுச்சிகள்
9. எண்ணக்கருக்களை
10. பாடசாலை
11. வீடு
12. பாவனைகள்
13. அனுபவங்கள்
14. மொழியும்
15. உறுப்புகள்
16. சுற்றுடல்
17. வெகுஜனத் தொடர்பு சாதனங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இந்த மொடியூலை படித்து முடித்திருக்கின்றீர்கள். அதை நன்றாகப் படித்திருக்கிறீர்களா? என்பதைப் பரிசோதிப்பது அதைப் பற்றி நீங்கள் சமர்ப்பித்த ஒப்படையைக் கொண்டாகும். கீழ்க்காணப் படுவது அந்த ஒப்படையாகும். கீழ்க்காணும் தலையங்கங்களில் ஒன்றை வைத்து விடை எழுதி தொலைக்கல்வி பிரிவுக்கு அனுப்பவும்.

## 8.0 ஒப்படைகள்

செயற்பாடு (3) இல் அறிந்து கொண்ட விளக்கங்களால் தாய்மொழிக்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பிள்ளையினதும், கூடிய புள்ளிகளைப் பெற்ற பிள்ளையினதும் மொழித் திறன்களை வேறுபடுத்தலுக்குக் காரணங்கள் என்ன என்பதை ஆராய்ந்து அறிக்கை தயாரியுங்கள்.

## 9.0 விடைகள்

**செவ்வைபார்த்தல் 2**

| | | |
|---|---|---|
| 1 ✓ | 6 ✓ | 11 ✓ |
| 2 ✓ | 7 ✓ | 12 ✓ |
| 3 ✓ | 8 ✓ | |
| 4 ✓ | 9 ✗ | |
| 5 ✓ | 10 ✓ | |

**7.0 பிற்சோதனை**

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. மொழி | 2. சந்தோஷம் |
| 2. சரி | 3. சூழல் |
| 4. சிந்தனை | 4. சித்திரம் |
| 6. பரம்பரை | 5. சொல் |
| 7. கேள்வி | 6. பதி |

## 10.0 உசாத்துணை நூல்கள்


1. கல்வி உளவியலும், அளவையியல்
பேராசிரியர் எஸ். முத்துலிங்கம் 1979

2. தமிழ் மொழி இலக்கண இயல்புகள் 1882
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

3. தமிழ் அமைப்புற்ற வரலாறு
சுவாமி ஞானப்பிரகாச சுவாமிகள்

4. தமிழ் மொழி இலக்கண இயல்புகள்
பேராசிரியர் அ. சண்முதாஸ்

5. மொழியியல்.
சா. சீனிவாசன
பாரி நிலையம், சென்னை 1960




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

PRINTED BY: UNITED MERCHANTS LTD. COLOMBO-13, SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org